மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண். 79/2019</u>

2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகம் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>29.11.2024 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. என் தாத்தா நாச்சியாண்டிபண்டாரம் தாவா சொத்தை காலி இடமாக கிரயம் பெற்றாரா அல்லது வீட்டோடு கிரயம் பெற்றாரா என்றால் வீட்டோடு தான் கிரயம் பெற்றார். என் தாத்தா நாச்சியாண்டி பண்டாரம் கிரயம் பெற்ற வீட்டில் என் தாத்தா குடியிருந்து வந்து அதற்கு பின்னிட்டு என் தகப்பனார் குடியிருந்து வந்து பின்பு நானும் என் சகோதரர்களும் குடியிருந்து அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். என் தாத்தா கிரையம் பெற்றபோது தாவா சொத்தில் இருந்த வீடானது நாட்டு மண்ணால் கட்டப்பட்ட வீடு தான் என்றும் தார்சு வீடு கிடையாது என்றும் சொன்னால் சரிதான். என் தாத்தா தாவா சொத்தை கிரயம் பெற்றபோது அதில் மூன்று அங்கன வில்லை வீடு இருந்தது என்றால் சரிதான். நானும் தண்டபாணியும் தாவா சொத்தில் எங்கள் அனுபவத்திற்கு இடையூறு வராத வகையில் தாவா சொத்தில் இரண்டு

கதவு எண்களுக்கு வரி செலுத்தினோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு இரண்டு கதவு எண்களும் இரண்டு மின் இணைப்புகளும் பெறப்பட்டது என்றால் சரிதான்.

2. தாவா சொத்தை பொறுத்து எனக்கும் என் சகோதரருக்கும் இடையே பதிவு செய்யப்பட்ட நிரந்தர பாகப்பிரிவினை ஆவணம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக சொல்லப்படும் மாதம் தேதி வருடம் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியாது. வாய்மொழி பாகப்பிரிவினையில் என் அண்ணனுக்கு வீடும் எனக்கு காலியிடமும் என கண்டுபிரித்துக் கொண்டோம். நான் சொல்வது உண்மை அல்ல என்றும் நாளது தேதி வரை தாவா சொத்தை பொறுத்து எங்களுக்குள் எந்த வாய்மொழி பாகப்பிரிவினையும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து நாளது தேதி வரை கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. என் தாத்தா எட்டு சென்ட் நிலத்தை கிரயம் பெற்றார் என்றால் ஆமாம். எனக்கும் என் சகோதரருக்கும் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள நிலத்திற்கு அரசால் பட்டா வழங்கப்பட்டது என்றால் ஆளுக்கு 4 சென்ட் நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. நான் சொல்வது உண்மை அல்ல என்றும் என் அண்ணனுக்கு 3 ½ சென்ட் விஸ்தீரணத்திற்கும் எனக்கு 2 ¼ சென்ட் விஸ்தீரணத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 5 வருடங்களுக்கு முன்பு தான் தாவா சொத்தில் நான் வீடு கட்ட ஆரம்பித்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் தான் நான் நிலத்தொட்டி கட்டியும் பொது சந்தை அடைத்தும் பொது அனுபவத்திற்கு இடையூறு செய்ததால்

பிரதிவாதிகள் என்னிடம் தாவா சொத்தை பொறுத்து பாகம் செய்து கொள்ளலாம் என்று கேட்டார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் வாதிகள் என் மீது இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான்.

3. நான் தாவா சொத்தில் உள்ள கட்டிட அமைப்புகளில் எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது என இடைக்கால உறுத்து கட்டளை கோரி வாதிகள் மனு தாக்கல் செய்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. நான் கொரோனா நோய் பரவல் காலகட்டத்தில் தான் தாவா சொத்தில் கட்டிடம் கட்டினேன் என்றால் சரிதான். கூட்டு அனுபவத்தில் உள்ள தாவா சொத்தில் நான் மாற்றங்கள் செய்து நிரந்தர கட்டிட அமைப்புகளை ஏற்படுத்திவிட்டு தற்போது வாய்மொழி பாகப்பிரிவினை அடிப்படையில் தாவா சொத்துக்களை நாங்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் நிரந்தர கட்டிட அமைப்புகளை ஏற்படுத்தி உள்ளது தாவா சொத்தில் வாதியின் பாத்தியத்தை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா சொத்தில் நான் தனியாக அனுபவம் செய்து வருகிறேன் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் அல்ல என்றும் மேற்படி ஆவணங்கள் ஏற்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பை இடமாற்றம் செய்யக்கூடாது என பரிகாரம் கோரி வாதிகள் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 38/2020 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை 6 சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் 3 பாகங்களை எனக்கும் 2

பாகங்களை வாதிகளுக்கும் ஒரு பாகத்தை 2,3 பிரதிவாதிகளுக்கும் ஒதுக்க வேண்டும் என்று தாவாவில் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 38/2020 வழக்கில் வாதிகள் கோரி உள்ளபடி தீர்ப்பாகத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2024.11.29 19:01:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்